01. பஞ்சாங்கம் என்பதன் பொருள் யாது?

02. காலக் கணிப்புக்கு அடிப்படையாக அமையும் அம்சங்கள் எவை?

03. மாதம், ஆண்டு ஆகியவற்றின் கணிப்பீடுகள் எவற்றை அடிப்படையாக கொண்டது?

04. சந்திரமானம் என்றால் என்ன?

05. சௌரமானம் என்றால் என்ன?, இதை வேறு எவ்வாறு அழைப்பர்?

06. பூர்ணிமாந்த முறை என்றால் என்ன?

07. அமாந்த முறை என்றால் என்ன?

08. பண்டைக் காலத்தில் தமிழர்கள் எம்முறையில் மாதங்களை வகுத்தனர்?

09. மாதம் எனப் பெயர் வரக் காரணம் யாது?

10. மாதத்திற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் எவை?

11. சித்திரை வருடப் பிறப்பு என்றால் என்ன?

12. நிறைமதி, உவாமதி என்பவற்றை வேறு எவ்வாறு அழைப்பர்?

13. தமிழர்கள் தவிர்ந்து சந்திரமான நெறிப்படி காலத்தை கணித்தவர்கள் யாவர்?

…………………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………………...

14. கிழமை, வாரம் எனும் சொற்கள் உணர்த்தி நிற்கும் பொருள் யாது?

…………………………………………………………………………………………………………...

15. கிழமைப் பெயர்களில் வராத நவக்கிரக தேவர்கள் யாவர்?

…………………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………………...

16. வாரத்தின் முதல்நாளாக ஞயிறைக் கொள்ள வேண்டும் என்பதன் காரணம் யாது?

…………………………………………………………………………………………………………...

17. இந்துக்கள் ஒருநாளை எவ்வாறு கணிக்கின்றனர்?

…………………………………………………………………………………………………………...

18. கிருஸ்தவம், இஸ்லாம் ஒருநாளை எவ்வாறு கணிக்கின்றது?

…………………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………………...

19. காலக் கணிப்பின் அடிப்படையில் இடம்பெறும் சைவ நடைமுறைகள் எவை?

…………………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………………...

20. காலத்தை கணித்து செய்யப்படும் சுப காரியங்கள் 03 தருக.

…………………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………………...

21. காலத்தை கணித்து செய்யப்படும் அமங்கல காரியங்கள் 03 தருக.

…………………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………………...

22. காலக் கணிப்பு எனும் தலைப்பில் சிறுகுறிப்பு வரைக.

…………………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………………...

…………………………………………………………………………………………………………...

## “அலகுப் பரீட்சை 04இற்கான விடைகள்”

01. வாரம், திதி, நட்சத்திரம், கரணம், யோகம் எனும் ஐந்து அம்சங்களைக் கொண்டு காலக் கணிப்பை செய்யும் முறைமை.
02. சூரியன், சூரியனைச் சுற்றிவரும் பூமி
    பூமியின் பூகோளான சந்திரன், அவற்றோடு தொடர்புடைய நட்சத்திரங்கள், இராசிகள்
03. சந்திரனையும் சூரியனையும் அடிப்படையாகக் கொண்டது.
04. சந்திரனை அடிப்படையாகக் கொண்டு மாதத்தை கணிப்பிடும் முறை - சந்திரமானம்.
05. சூரியனை அடிப்படையாகக் கொண்டு மாதத்தை கணிப்பிடும் முறை - சௌரமானம்.
    வேறுபெயர் - சூரியமானம்.
06. நிறை மதியை / பூரணையை இறுதிநாளாகக் கொண்டு மாதத்தைக் கணித்தல் - பூர்ணிமாந்த முறை (பூர்ணிம + அந்தம்)
07. உவா மதியை / அமாவாசையை இறுதிநாளாகக் கொண்டு மாதத்தைக் கணித்தல் - அமாந்த முறை (அம + அந்தம்)
08. சந்திரமான நெறியில் பூர்ணிமாந்த முறையில்.
09. மதியின் அடிப்படையிலே மாதம் கணிக்கப்படுவதால்.
10. மதி, திங்கள்
11. சூரியன் மேட ராசியில் பிரவேசிக்கும் நாள்.
12. நிறைமதி - பூரணை
    உவாமதி - அமாவாசை
13. உரோமர், கிரேக்கர், வட இந்தியர்
14. உரிமை
15. இராகு, கேது
16. எல்லாக் கிரகங்களையும் ஈர்த்து அவற்றின் நடுநாயகமாக சூரியன் திகழ்வதால்.
17. ஒருநாள் சூரிய உதயம் முதல், அடுத்தநாள் சூரிய உதயம் வரையான காலம் ஒருநாள்.
18. கிருஸ்தவர்கள் - ஒருநாள் நள்ளிரவு முதல், அடுத்தநாள் நள்ளிரவு வரையான காலம் ஒருநாள்.
    இஸ்லாமியர் - ஒருநாள் சூரிய அஸ்தமனம் முதல், அடுத்தநாள் சூரிய அஸ்தமனம் வரையான காலம் ஒருநாள்.
19. வழிபாடுகள், விழாக்கள்
    விரதம், பண்டிகைகள்
20. பெயர் சூட்டுதல், காது குத்தல், சோறு ஊட்டல்
    மங்கல நீராட்டு, திருமணம்
21. ஆண்டு திதி, அஸ்தி கரைத்தல்
    திருஷ்டி கழித்தல், இறுதிச் சடங்கு
22. பஞ்சாங்கத்தை கணித்தவர் ஆரியப்பட்டர். (பந்தி அமைப்பில் எழுதப்படல் வேண்டும்)
    குப்தர் காலத்தில் தோற்றம் பெற்றதே பஞ்சாங்கம்.
    வாரம், திதி, நட்சத்திரம், கரணம், யோகம் எனும் ஐந்து அம்சங்களைக் கொண்டு காலக் கணிப்பை செய்யும் முறைமையை கொண்டது.
    இந்துக்களின் வாழ்வியலில் சுப காரியங்கள், அமங்கல காரியங்களில் முக்கிய இடம் பிடிப்பது.
    உலகில் ஏற்படும் வானியல் நடைமுறைகளை துல்லியமாக தொகுத்துக் கூறுவது...